**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2014**

**A061 நாட்டுப்புறவியல்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பழமொழிக்கு வழங்கும் வேறு பெயர்களில் இரண்டனைக் குறிப்பிடுக.
2. மக்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்தவை எவை?
3. மனிதனின் பிறப்போடும் வாழ்வோடும் பின்னிப் பிணைந்து நிற்பது எது?
4. தமிழில் வெளிவந்த முதல் நாட்டுப்புறப் பாடல் தொகுப்பு நூல் எது?
5. எந்த அரசை எதிர்த்துத் தேசிங்கு போராடினான்?
6. "பிறவி வழித் தொழில் நிர்ணயம்" என்னும் சமூக மரபை மீறிய கதாநாயகர்கள் யார்? யார்?
7. மதுரை நகர் பற்றிய வருணனை இடம்பெற்ற கதைப் பாடல் எது?
8. கதைப் பாடல் எத்தனை பிரிவுகளைக் கொண்டிருக்கும்? அவை யாவை?

9. பஞ்சதந்திரக் கதைகளைச் செருமானிய மொழியில் மொழிபெயர்த்தவர் யார்?
10. 'பிசி' என்றால் என்ன?
11. பாடல் இடம்பெறும் விளையாட்டு எது?
12. உறுமிமேள ஆட்டம் மிகுதியாகக் காணப்படும் ஊர்கள் யாவை?
13. பூப்படைதல் என்றால் என்ன?
14. தொடக்கக் கால வழிபாடுகள் யாவை?
15. கற்சிற்பங்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. நாட்டுப்புறக் கதைப்பாடல் என்றால் என்ன? விளக்குக.
2. விடுகதையின் வகைகள் யாவை?
3. தொழிற் பாடல்கள் – விளக்குக.
4. பழமொழிகளின் இயல்புகளில் நான்கைக் குறிப்பிடுக.
5. திருமணச் சடங்கு குறித்து விளக்குக.
6. பெண் தெய்வங்கள் குறித்துச் சுருக்கமாக விளக்குக.
7. வெப்பு நோய்கள் – குறிப்பு வரைக.
8. பொம்மலாட்டம் குறித்துச் சிறு குறிப்பு எழுதுக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) கைவினை, கைவினைக் கலைகள் குறித்த பல்வேறு விளக்கங்களையும் தொகுத்துத் தருக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புறவியல் மரபுகள் குறித்துக் கட்டுரை வரைக.

2. (அ) நாட்டுப்புறக் கதைகள் உலகளவில் எவ்வாறு சேகரிக்கப் பெற்றுப் பதிவாகின்றன என்பதை விவரிக்க.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புறப் பாடல்களில் வாழ்வியல் நிலைப்பாடுகள், குடும்பம், சமூகம் ஆகியவை எவ்வாறு ஆராயப்படுகின்றன?

3. (அ) நாட்டுப்புறவியலை அறிஞர்கள் எவ்வாறு பகுத்துள்ளனர்? அவற்றின் பண்புகளை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) பழமொழிகளின் இயல்புகளைப் பற்றி விரிவாக எழுதுக.